பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு
The EELA NADU

மலர்: 19 வைகாசி 21 ஜு ஆகிர்: 15 இதழ்: 112
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 3-6-77

## நாடுமுழுவதும் டாக்டர்கள் வைத்திய லீவில் சென்றனர்

யாழ்ப்பாணம், வெள்ளி
நாடு முழுவதுமுள்ள ஆஸ்பத்திரிகளில் பணிபுரியும் டாக்டர்கள் நேற்று வைத்திய லீவில் சென்றனர்.

எனினும் மிகக்கடுமையான நோயாளர்களை டாக்டர்கள் பார்வையிட்டனர்.

மிக அவசரமான சத்திர சிகிச்சைகளும் மேற்கொள்ளப்பட்டன.

**யாழ். ஆஸ்பத்திரியில்**

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியிலும் டாக்டர்கள் அனைவரும் நேற்று வைத்திய

(6-ம் பக்கம் பார்க்க)

### டாக்டர்கள் பிரச்னைகடந்த ஏப்ரலில் தீர்க்கப்பட்டு விட்டதாம்

கொழும்பு, வியாழன்
டாக்டர்களின் கோரிக்கைகள் தொடர்பாக கடந்த ஏப்ரல் மாதம் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும் நிதி

(6-ம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணம், காங்கேசனில் கம்யூனிஸ்ட் போட்டியிடாது

## கடைசி நேரத்தில் மாற்றம்

யாழ்ப்பாண்ம், வெள்ளி

**இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி காங்கேன்துறைத் தொகுதியிலும் யாழ்ப்பாணத் தொகுதியிலும் போட்டியிட மாட்டாது எனதெரியவந்துள்ளது. வடக்கில் உடுப்பிட்டியிலும், கோப்பாயிலும் அக்கட்சி வேட்பாளர்களை நிறுத்த உள்ளது.**

காங்கேசன்துறையில் திரு. விஜயானந்தனும் யாழ்ப்பாணத்தில் திரு. எம். சி. சுப்பிரமணியமும் போட்டியிடுவதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆயினும் கட்சி அதன் முடிவை மாற்றியிருப்பதாகத் தெரிகிறது.

உடுப்பிட்டித் தொகுதியில் கம்யூனிஸ்ட்கட்சிசார்பில் திரு. பொன் குமாரசாமி போட்டியிடுவது உறுதியாகியுள்ளதாகவும் தெரியவருகிறது.

கோப்பாய்த் தொகுதியில் கம்யூனிஸ்ட்கட்சி சார்பில் திரு. கே. தவஞானம் போட்டியிடுவார். (க-அ)

## போட்டியிலிருந்து இவர்கள் வாபஸ்

யாழ்ப்பாணம், வெள்ளி
முல்லைத்தீவுத் தொகுதியில் சுயேச்சை அபேட்சகராகப் போட்டியிடவிருந்த திரு. த. சச்சிதானந்தன் முல்லைத்தீவு தமிழர் விடுதலைக்கூட்டணி அபேட்சகரான திரு எக்ஸ். எம் செல்லத்தம்புவிற்கு ஆதரவாக போட்டியிலிருந்து வாபஸ் பெற்றுள்ளதாக நேற்று தெரிவித்தார். இவர் திரு. செல்லத்தம்புவிற்கு ஆதரவாக பிரசாரம் செய்யவிருக்கிறார்.

சாவகச்சேரித் தொகுதியில் சுயேச்சை அபேட்சகராகப் போட்டியிடவிருப்பதாக அறிவித்த திரு. எச்ஸ். பி ஹண்ட் சாவகச்சேரி ஜி. ஜி. காங்கிரஸ் அபேட்சகர் திரு. வி. குமாரசாமிக்கு ஆதரவாகப் போட்டியிலிருந்து வாபஸ் பெற்றுள்ளார்.

ஊர்காவற்றுறைத் தொகுதியில் சுயேச்சையாகப் போட்டியிடவிருந்த திரு. என். எஸ் கே. லட்சுமணன் இத்தொகுதியில் போட்டியிடும் யு. என். பி. அபேட்சகருக்கு ஆதரவாக தேர்தலிலிருந்து விலகியுள்ளார்.

நல்லூர்த் தொகுதியில் சுயேச்சை அபேட்சகராக போட்டியிடவிருந்த கொக்குவில் கிராமசபை விசேஷ ஆணையாளர் திரு. புஷ்பராசா கூட்டணி அபேட்சகர் திரு. எம். சிவசிதம்பரத்திற்கு ஆதரவாகப் போட்டியிலிருந்து வாபஸ் பெற்றுள்ளார். சட்டத்தரணி ஆர். விஸ்வநாதனின் வேண்டுகோளுக்கிணங்கவே அவர் வாபஸ் பெற்றுர்.

## யாழ்.-கொழும்பு ரயில் சேவை

யாழ்ப்பாணம், வெள்ளி
காங்கேசன்துறைக்கும் கொழும்புக்குமிடையில் இப்போது ஒரே ஒரு ரயில் சேவை மட்டுமே நடைபெற்று வருகிறது.

காலை 6-55க்கு காங்கேசன் துறையிலிருந்து கொழும்பை நோக்கி கடுகதி ரயில் ஒன்று புறப்படுகிறது. இந்த ரயில் பகல் 1-30க்கு கொழும்புக் கோட்டையைச் சென்றடையும்.

இதேபோன்று பகல் 11-55க்கு கொழும்புக் கோட்டையிலிருந்து புறப்படும் ரயில் இரவு 7-45க்கு யாழ். புகையிரத நிலையத்தை வந்தடையும்.

### மெதுவான ரயில்

இதேசமயம் காலை 6-55க்குச் காங்கேசன்துறையிலிருந்து மெதுவாகச் செல்லும் ரயில் மாகோவரை சென்று திரும்புகிறது.

### தபால் சேவை

ரயில்சேவை சீர்குலைந்திருப்பது காரணமாக நாடு முழுவதும் தபால் சேவை வான் மூலம் நடத்தப்படுகிறது.

வழமைபோல் தபால்கள் உரிய இடங்களுக்கு அனுப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளபோதிலும் ஒரு நாள் கழித்தே தபால் விநியோகிக்கப்படுவதாக தபால் பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ)

### பொலிசார் மீது தாக்குதல்

கொழும்பு,வியாழன்
கடவத்தை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரு கான்ஸ்டபிள்கள் இரவு வேலை ரோந்து சுற்றுவதில் ஈடுபட்டிருந்தபோது இனந்தெரியாத இருவரால் தாக்கப்பட்டனர்.

ரயில் பாதையூடாக இவர்கள் ரோந்து சுற்றுவதில் ஈடுபட்டிருந்ததாகவும் அப்போது திடீரென இருளில் இருந்து பாய்ந்த இருவர் இவர்களைத் தாக்கி விட்டு ஓடிவிட்டதாகக் கூறப்பட்டது.

இத்தாக்குதலால் ஒரு கான்ஸ்டபிள் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ)

### நல்லூரில் சமசமாஜ வேட்பாளர்

யாழ்ப்பாணம், வெள்ளி
நல்லூரைச் சேர்ந்தவரும் லங்கா சமசாஜக்கட்சி உறுப்பினரும் கட்சியின் வாலிபர் சங்க நல்லூர்க் கிளைக் காரியதரிசியுமான திரு. இ. இராஜேந்திரராஜா நல்லூர்த் தொகுதியில் கட்சியின் வேட்பாளராக நிறுத்தப்படவுள்ளார். இவர் கடந்த 62-ம் ஆண்டில் நடைபெற்ற டிச்கோயா நகரசபைத் தேர்தலில் கட்சி சார்பில் போட்டியிட்டார். (அ)

## ஈழவிடுதலை இயக்கம் த. இ. பேரவையுடன் இணையும்

யாழ்ப்பாணம், வெள்ளி
தேர்தலை பகிஷ்கரித்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் கீழ் இயங்க மறுத்து பிரிந்துசென்ற ஈழ விடுதலை இயக்கத்தினர் தமிழ் இளைஞர்பேரவையுடன் இணைந்து செயலாற்ற முடிவு செய்துள்ளனர்.

ஈழவிடுதலை இயக்கம் இளைஞர்பேரவையுடன் உத்தியோக ரீதியில் இன்னும் சில தினங்களில் இணைய இருக்கின்றது.

ஈழ விடுதலை இயக்க முக்கியஸ்தரான திரு. வரதராஜா இவ்வியக்கத்திலிருந்து ராஜினாமாச் செய்யவிருக்கின்றார். மற்றும் சில தீவிர இளைஞர்களும் இயக்கத்திலிருந்து ராஜினாமா செய்யவிருக்கின்றனர் (க-இ)

### “செல்வாவின் அரசியல் வாரிசு வி. நவம்”

—கோடீஸ்வரன்

வண்ணார்பண்ணை, வியா.
“அமரர் தந்தை செல்வநாயகத்தின் அடுத்த அரசியல் வாரிசு தமிழர் சுயாட்சிக் கழக தலைவர் திரு. நவரத்தினம் என்பதை தமிழ் இனம் நன்ருக உணரும்.”

இவ்வாறு ஊர்காவற்றுறை திறந்த வெளியரங்கில் நடந்த அமரர் செல்வநாயகத்தின் அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய தமிழர் சுயாட்சிக் கழக பொதுச் செயலாளரும் சட்டத் தரணியுமான திரு. செல்லையா கோடீஸ்வரன்

(6-ம் பக்கம் பார்க்க)

### முக்கிய அறிவித்தல்

போக்கு வரத்துக் கஷ்டங்களினலும், வேறு தவிர்க்க முடியாத காரணங்களினலும் 'ஈழநாடு' நாளிதழின் பக்கங்களை தற்காலிகமாக ஆறு பக்கங்களாகக் குறைக்க நேர்ந்துள்ளது. நிலைமை சீர்திருந்தியவுடன் மீண்டும் பழையபடி கூடிய பக்கங்களுடன் வெளிவரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்ருேம்.

நிர்வாகி,
ஈழநாடு

### மணிவாக்கு

சமயமானது, இவ்வுணர்வைக் கொள்வது, அவ்வுணர்வைத் தள்ளுவது என்ற இவைகளில் தங்கியிருக்கவில்லை; அது கடவுளை உள்ளத்தில் உணர்வதிலேயே தங்கியுள்ளது.

—மகாத்மா காந்தி.

ஈழநாடு
THE EELANAADU

# அரசின் இறுதிக் கோரிக்கை

சட்டப்படி வேலைசெய்யும் புகையிரத ஊழியர்களுக்கு அரசு இறுதிக் கோரிக்கையொன்றை விடுத்திருக்கின்றது.

இரு தரப்பினருக்குமிடையில் மேற்கொண்டும் பேச்சு வார்த்தைகள் நடப்பதை அல்லது சுமுகமான முடிவொன்றைக் காண்பதற்கான வாய்ப்பை இது இல்லாமற் செய்துவிட்டதாகக் கருதமுடியாது.

ஆனால் புகையிரத ஊழியர்களுக்கு விடுத்துள்ள இந்தக் கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விஷயங்கள் சிந்தனைக்குரியவை.

புகையிரத ஊழியர்களின் கோரிக்கைகளில் அடங்கியுள்ள சம்பள உயர்வு, குறைந்த பட்சச் சம்பளம் ஆகிய இரண்டையும் நிறைவேற்றுவதற்கே அரசுக்கு 100 கோடி ரூபாய் தேவைப்படுமென்றும் காபந்து அரசு ஒன்றினால் இதனை நிறைவேற்றுவது சாத்தியமில்லை என்றும் அரசு குறிப்பிட்டுள்ளதுடன் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநிறுத்தவும், அத்தியாவசிய சேவைகளைக் கொண்டு நடத்தவும் தனக்குள்ள பொறுப்புக்களைத் தட்டிக்கழிக்கப்போவதில்லையென்றும் வலியுறுத்தியுள்ளது.

பொதுத் தேர்தலுக்கான ஆயத்தங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் புகையிரத ஊழியர்களின் இந்த நடவடிக்கை, அரசுக்குச் சங்கடத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட ஒன்றா அல்லது உண்மையிலேயே தொழிற்சங்கப் பிரச்னைகள் தொடர்பானதுதானா என்ற சந்தேகத்தையும் அரசு கிளப்பியுள்ளது.

எது எவ்வாறாயினும், இந்தச் சட்டப்படி வேலைசெய்யும் நடவடிக்கை பொது மக்களுக்குப் பெரும் சங்கடங்களை ஏற்படுத்தியுள்ளது என்பதை யாரும் மறுக்கமுடியாது.

ஏழு ஆண்டுகளின் பின்னர், மக்கள் தமது ஜனநாயகக் கடமைகளில் ஒன்றான வாக்களிப்பில் கலந்துகொள்வதற்கு ஆர்வத்துடன் ஆயத்தம் செய்துகொண்டிருக்கும் வேளையில் இப்படியான போக்குவரத்துச் சங்கடங்கள் ஏற்படுவது அவர்களின் ஆத்திரத்தைக் கிளறிவிடுவதாக இருக்குமேயன்றிப் பொது மக்களின் அனுதாபத்தைப் பெறுவதாக அமையாது.

போதாக்குறைக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் தூர இடங்களுக்கு உரிய காலத்தில் போய்ச் சேராமையால் அவைகளுக்குத் தட்டுப்பாடும் தோன்றியுள்ளது. மண்ணெண்ணை, பெற்றோல் போன்ற எரிபொருட்களுக்கு மக்கள் ஏற்கனவே 'கியூ' வரிசைகளில் கால்கடுக்க நிற்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

இந்த நிலைமை நீடித்தால், யாருக்கும் லாபம் ஏற்படமுடியாது. மாறாக, நாம் மேலே கூறியதுபோல் மக்கள் மத்தியில் வெறுப்பும் விரக்தியும்தான் அதிகரிக்கும்.

எனவே, புகையிரதச் சேவையில் மாத்திரமின்றி ஏனைய துறைகளிலும்கூட இப்போது ஏற்பட்டிருக்கும் 'பதற்ற' நிலைமையை ஒரு சுமுகமான முடிவுக்குக் கொண்டுவருவதற்கு யார் முந்துகிறார்களோ அவர்களின் பக்கமே மக்களின் அனுதாபம் சாயுமென்பதில் சந்தேகமில்லை.

அதனால் பதவியிலிருப்பது காபந்து அரசு என்பதையும், இன்னும் சில வாரங்களில் புதிய அரசு ஒன்று பதவிக்கு வந்துவிடும் என்பதையும் கருத்திற்கொண்டு இப்போதைய நெருக்கடியில் தற்காலிகமாகவேனும் ஒரு நல்ல முடிவை ஏற்படுத்துவதற்குச் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் விரைந்து முயல வேண்டும்.

ஆசிரியருக்குக் கடிதம்!

## தடைக்கல் வேண்டாம்

26-5-77 ஈழநாடு இதழில் 'சிறுபான்மைத்தமிழர் ஐயுறவு நீக்கப்பட்டது' என்னும் தலைப்பில் ஆசிரியர் திரு. க.நடேசன் (செயலாளர், அ. இ. சி. பா. த. மகாசபை, வட்டக்கச்சிக் கிளை) அவர்கள் எழுதிய கருத்துக்கள் மிகமிகப்பாராட்டப் படக்கூடியவையாகும். குறித்த சமூகத்தவர்களின் உயர்வுக்காகவும், உரிமைக்காகவும், எங்கள் மதிப்புவாய்ந்த தலைவர்கள், இத்தருணம் செய்துள்ள இந்தமுடிவுஉணர்வுள்ள மக்கள் எவரையும் மகிழ்வடையச்செய்யும் என்பதற்கு ஐயமில்லை. தந்தை செல்வா வன்னியசிங்கம், வி. ஏ. கந்தையா, இராஜவரோதயம், ஏகாம்பரம் போன்ற மறைந்தும் மறையாத தமிழ்த்தலைவர்கள் இச்சமூகத்தவர்களின் உரிமைக்காகப் பாடுபட்டு அருந்தொண்டுகள் பல புரிந்துள்ளதை யாவரும் அறிவர். அக்காலம், பலரது பெரும்எதிர்ப்புகளின் மத்தியில், ஒரு செனட்டராக திரு. நல்லையா அவர்களை நியமித்து விடுதலை இயக்கத்தை வெற்றிநடைபோடச் செய்தமையை எண்ணும் போது அவர்களுடைய தீர்க்க தரிசனம் தான் என்னே.

உடுப்பிட்டித் தொகுதியில் இன்று யாவராலும் மதித்து வரவேற்கப்படும் அன்பர் திரு. இராஜலிங்கத்தைப் போட்டியின்றி அனுப்பவேண்டியது தமிழினத்துக்கே பெருமை தரும் செயலாகும். தந்தை செல்வநாயகத்திற்குத் தமிழினம் நன்றிசெலுத்தும் வகையில் இரண்டு நற்காரியங்கள் அவசியம் முதலிற் செய்யப்பட வேண்டும். தேர்தல் நியமனத் திகதியிலன்றே இந்த நல்ல கருமம் உலகுக்குக்காட்டப்பட வேண்டும் ஒன்று உடுப்பிட்டித்தொகுதி. அடுத்தது, தந்தையின் தொகுதி. இவ்விரு தொகுதிகளும் தமிழ்இன விடுதலைக்குரலை உலகம் அறிய வைக்கக்கூடிய இரு கண்களாக விளங்குகின்றன. என்ன நடக்கப்போகிறது? போட்டி போட்டு சிதறிச் சீரழிவை வளர்ப்போமா? அல்லது ஒரு குடைக்கீழிருந்து ஒரே குரலில் பேசிஉரிமையைஅடைவோமா? தமிழினமே! உனது அரிய கடமையை பரிசுத்தமாகச் செய்வாயாக.

கா. இரகுநாதன்
நாயன்மார்கட்டு.

இன்று குருபூசை

# நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய சம்பந்தர்

— சைவப்புலவர் நா. விசுவலிங்கம் —

''வேதநெறி தழைத்தோங்க
மிகு சைவத் துறைவிளங்கப்
பூத பரம்பரை பொலியப்
புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற் புகலித்
திருஞான சம்பந்தர்
பாத மலர் தலைக்கொண்டு
திருத்தொண்டு பரவுவாம்''

சோழவளநாட்டிலே 7-ம் நூற்றாண்டளவில்ஒரு குழந்தை ''அம்மையே அப்பா'' என்று அழுதது. அத்தெய்வக் குழந்தை பால் வேண்டி அழுதிடவில்லை. வேதநெறி தழைக்கவும், சைவம் விளங்கவும், அடியார் திருக்கூட்டம் வாழவும் அழுதது. அந்த அழுகையே ''தோடுடைய செவியனால் ஞானப்பால் வழங்கி ஞான சம்பந்தனாக மாற்றியது.

சமய குரவரரில் வயதில் இளைய செய்வக் குழந்தைக்குத் தாளம் ஈந்ததோடு மட்டும் அமையாது முத்துப் பல்லக்கும் இறைவனால் அருளப்பட்டது.

இவ்வாறு இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட ஞானசம்பந்தப் பெருமான் தமிழ் நாடெங்கணும் தலயாத்திரை புரிந்து இன்னிசையால் இறைபக்தியை வளர்த்ததோடு அமையாது தமிழ் பரப்பும் திருத்தொண்டும் புரிந்தார். சுந்தரர் ஞானசம்பந்தரைப் போற்றிப் பரவும் போது இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞான சம்பந்தன் எனக் கூறியுள்ளார்.

தனது பாடல் இசையோடு அமையவேண்டும்எனக் கருதிப் போலும் திருநீலகண்டப் பெரும்பாணரையும் தம்முடன் அழைத்துச் சென்றார். அவ்வாறு பெரும்பாணரால் பண்ணிசை, யாழிசையுடன் சேர்ந்து சிவநெறி பெருகியது: இவ்வாறு யாழும் இசையும் சேர்ந்தமையே பிற்காலத்தில் தேவாரங்களுக்குப் பண்ணடைவு வகுக்கப் பேருதவியாக அமைந்ததெனலாம்.

ஞானசம்பந்தரின் இன்னிசைக்குத் திருமறைக்காட்டுத் திருக்கடைக்காப்புப் பதிகமே சான்றாகும் நாவுக்கரசர் ''இரக்கமொன்றிலீர் சிறக்க இக்கதவந்திறமினே''

எனப்பத்தாவது பாடல் பாடிக் கதவு திறக்கச் செய்தமையும், ஞானசம்பந்தர் ''கதவந்திருக்காப்புக் கொள்ளுங் கருத்தாலே''

என்ற முதலாவது பாடலிலேயே

திருக்காப்புக் கொண்டமை சுந்தரரால் ''உலகவர் முன் தாளமீந்து அவன் பாடலுக்கிரங்குந் தன்மையாளன்'' எனக் குறிப்பிட்டது மிகப் பொருத்தமாகும்.

ஞானசம்பதர் இன்னிசையால் தமிழ்பரப்பியதோடு அமையாது, சிவம்பெருக்கும நெறிவிளைத்தமையும் நோக்கற்பாலது. பாண்டிநாட்டிலே சைவங்குன்றிச் சமணமதம் பரவியதோடு அரசனும் பரமதம் புக்கவேளை சைவத்தையும் தமிழையும் தென்பாண்டி நாட்டில் காத்த தனிப் பெருமை ஞானசம்பந்தப் பெருமானுக்கே உரியது. இலக்கண இலக்கிய வல்லுநராய்த் தமிழ்மொழி வளர்த்த சமணரைச் சம்பந்தரின் ஞான விஜயமே பாண்டிநாட்டிலிருந்து அகற்றியதெனலாம்.

இந்நிலை ஏற்பட்டிராவிடின் ''தென்னாடுடைய சிவனே போற்றி'' எனப்பாண்டி நாட்டில் பரவும் பேறுகிட்டியிருக்குமா? என்பது சைவ உலகப் பெருமக்கள் சிந்திக்க வேண்டியதாகும்.

''பாலமுதம் உண்டு தமிழ்ப் பாமாலைபாடி இந்தத் தாலம் புகழவரும் சம்பந்தப் பெருமானுக்கு''

அன்னாரின் குருபூசைத்தினத்தன்று பெருவிழா எடுத்து வழிபடல் சைவ உலகத்தினரது நீங்காக் கடமையாகும்.

# ''அன்று சலுகைகளைப்பெற்றுவிட்டு இன்று அறிக்கை விடுவதா?''

### அஞ்சலக திறப்பு விழாவில் அமைச்சர் 'குரியர்'

சுழிபுரம், வியாழன்:

வட்டுக்கோட்டைத்தொகுதியில் 1970-ம் ஆண்டுக்கு பின்னர் இரண்டு புதிய தபால் அலுவலகங்கள் கட்டப்பட்டுள்ளன. ஒன்று காரைநகரிலும் மற்றையது சுழிபுரத்திலும் கட்டப்பட்டுள்ளன. காரைநகரில் திரு. அ. அமிர்தலிங்கம் முயற்சியாலும் சுழிபுரத்தில் இன்று திறக்கப்பட்ட கட்டிடம் எனது முயற்சியாலுமே கட்டப்பட்டதாகும். சுழிபுரத்தில் இப்புதியகட்டிடத்தைக் கட்டுவதற்கு எமது பிரதமர் ஸ்ரீமாவோ அம்மையார் செய்த உதவியை நாம் என்றும் நன்றியோடு போற்றக்கடவோம். சுழிபுரத்தில் புதிதாகக் கட்டப்பட்ட இவ்வஞ்சல் நிலையத்திற்குப்பணம் ஒதுக்குவதற்கு தடையாக இருந்தவர்களையும், சூட்ச்சி செய்தவர்களையும் நான்நன்கு அறிவேன். அவர்கள் செய்த சதியை எல்லாம் தவிடுபொடியாக்கிஇன்று சுமார் நான்கு லட்சம் ரூபா பெறுமதியான ஓர் அழகிய கட்டிடத்தை கட்டிமுடிப்பதில் நான் வெற்றி பெற்றதில் பெருமிதம் அடைகிறேன்''

இவ்வாறு சுழிபுரம் புதிய அஞ்சல் அலுவலகக் கட்டிடத் திறப்புவிழாவில் கலந்து அக் கட்டிடத்தைத் திறந்து வைத்துப்பேசிய தபால் தந்தி அமைச்சர் செல்லையா குமாரசூரியர் பேசுகையில் குறிப்பிட்டார். திறப்புவிழா வைபவத்திற்கு திரு. வை. இராஜசுந்தரம் தலைமை வகித்தார்.

சமயக்கிரியைகளுடன் பூசை நடைபெற்று தீபம் ஏற்றப்பட்டு தபாற் கந்தோர் உத்தியோக பூர்வமாகத் திறக்கப்பட்டது.

### அன்று சலுகை இன்று அறிக்கையா?

அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் மேலும் பேசுகையில் ''தந்தைசெல்வநாயகம் நோய்வாய்ப்பட்டு இருந்த காலத்தில் எமது பிரதமர் ஸ்ரீமாவோ அம்மையார் எவ்வளவு ஒத்தாசையுடன் உதவிகள் புரிந்ததைப் போல் இத்தபால் கந்தோர் கட்டிடத்தைக் கட்டுவதற்கு பிரதமர் உதவிசெய்துள்ளார். இவற்றுக்குநாம்பெரும்நன்றி உடையவர்களாக என்றும் விளங்குவோம். வட்டுக்கோட்டைத் தொகுதிதேசியப்பேரவைஉறுப்பினராகஇருந்தகாலதிதில் திரு. ஆ.தியாகராசா தான் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிஎன்றுகூறி,சகல சலுகைகளையும்பெற்றபின்னர் இன்று ஏதோ எல்லாம் அறிக்கைகள் விட்டுப்பேசுவது எமக்கு விந்தையாகவுள்ளது! திரு. ஆ. தியாகராசா சென்றகாலத்தில் விட்டதவறுகள் எல்லாவற்றையும் பொதுமக்களுக்குச்சுட்டிக் காட்டும் காலம் எமக்கு நெருங்கிவிட்டது. பொறுத்திருப்போம். திரு. அ. அமிர்தலிங்கம் இன்று வட்டுக்கோட்டைத்தொகுதியை விட்டுவேறு இடத்திற்கு சென்றது பிரதேச வேறுபாட்டைக் காட்டுகின்றது.

வட்டுக்கோட்டைத் தொகுதியில் போட்டியிட்டுதனிநாட்டுக்கொள்கையைவெற்றிகாண்பதே மேலாகும்.எனது சொந்த மண்தான் முதல் தேவையாகும்''என்று கூறினார்.

தபால் அத்தியட்சகர் திரு. எஸ். ஜெயவர்த்தன பேசுகையில், சுழிபுரம் புதிய தபால் அஞ்சல் அலுவலகம் விரைவாகக்கட்டி முடிப்பதில் எமது தபால் பகுதியினர் எடுத்த நடவடிக்கைகள் மூலம் ஒரு சாதனையை நிலைநாட்டி விட்டனர் என்றார். திருவாளர்கள் எஸ். சுப்பிரமணியம் எஸ்.கந்தையா சு. நடேசு உட்பட பலர் பேசினர்.பண்டிதை பொன்.பாய்க்கியம் நன்றியுரை கூறினார்.

## 'ஹரேகிருஷ்ண ஹரேராமா'

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் வந்திருக்கும் அமெரிக்க இளந்துறவிகள் ஹரேகிருஷ்ண ஹரேராமா-கோஷ்டி இன்று இரவு அரியாலை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் பஜனை செய்வார்கள்.

48 லட்சம் ரூபா

# விஞ்ஞான உபகரணங்கள் இறக்குமதியாகும்

கொழும்பு, வியா

விஞ்ஞான பாடங்களின் பொருட்டு பாடசாலைகளுக்கு வெளிநாடுகளில் இருந்து விஞ்ஞான உபகரணங்கள் இறக்குமதி செய்யப்படவிருக்கின்றன.

கல்வியமைச்சு இதற்கான ஏற்பாட்டை செய்துள்ளது.

பிரிட்டன், அமெரிக்கா, மேற்கு ஜேர்மனி ஆகிய நாடுகளில் இருந்து 40லட்சம் ரூபா பெறுதியான உபகரணங்கள் இறக்குமதி செய்யப்படவிருக்கின்றன.

இலங்கை - சோவியத் வர்த்தக உடன்படிக்கை அடிப்படையில் 8லட்சம் ரூபா பெறுமதி மிக்க மற்றொரு விஞ்ஞான உபகரணத்தொகுதியும் இறக்குமதி செய்யப்படும்.

6-ம்வகுப்பில் இருந்து 11-ம் வகுப்பு வரை விஞ்ஞான கல்வி பெறும் மாணவர்களுக்கு இவ்வுபகரணங்கள் பயன்படும்.

இலங்கையில் உற்பத்தி செய்யப்படாத உபகரணங்களே இவையாகும். (உ)

# "ஊழல் பேர்வழிகளுக்கு ஆதரவளித்தவர்கள்

# எம் ஜி ஆர் கட்சியினர்தான்

## அ. இ. அ. தி. மு. கழக உறுப்பினராஞல் மட்டும் தூய்மையானவராக முடியுமா?"

சென்னை, ஜூன் 2

'ஊழல் பேர்வழிகளுக்கு ஆதரவளித்து அவர்களுக்கு தமது கட்சியில் இடமளித்தவர்கள் அனைத்திந்திய அண்ணு திராவிட முன்னேற்றக் கழகத்தினர். அக்கட்சியில் உறுபினரால் மட்டும் ஒருவர் தூய்மையானவராகி விடமுடியுமா? என்று தி. மு. க. தலைவர் கலைஞர் மு. கருணநிதி நேற்று சென்னையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் வினவிஞர்.

'எம். ஜி. ராமச்சந்திரன் தூய்மையானவர் போல் வேஷம் போடுகிருர்' என்று குற்றம் சாட்டிஞர் கலைஞர்.

### மூன்னரிலும் பெரும் வெற்றிகிட்டும்

தற்போது தமிழ் நாட்டில் சூழ்நிலை முற்ருக மாறியுள்ளதால் தி. மு. கவுக்கு கடந்த சட்டசபைத் தேர்தலில் கிடைத்ததிலும் பார்க்க அதிக வெற்றி கிட்டும்' என்று கலைஞர் நம்பிக்கை தெரிவித்தார். கலைஞர் தமது உரையில் மேலும் சொன்னதாவது, 'காங்கிரஸ் மத்திய ஆட்சி தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி சர்வாதிகார ரீதியில் தி மு. க. ஆட்சியைத் தமிழ் நாட்டில் கலைத்தது. கழக ஆட்சி கலைக்கப்பட்டபின் எமது அமைச்சரவை மீது அபாண்டமான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. எனக்கும் என்சக அமைச்சர்களுக்கும் எதிராக ஊழல் விசாரணைக் கமிஷன்கூட நியமிக்கப்பட்டது. எனினும் அவதூருன குற்றச்சாட்டுகளால் மக்களை ஏமாற்றிவிட முடியாது.'

### எம். ஜி. ஆர்.

[]தென் சென்னையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம்ஒன்றில்அ. இ அ.தி. மு க தலைவர் திரு. எம.ஜி. ராமச்சந்திரன் பேசுகையில், பேரறிஞர் அண்ணவின் கொள்கைகளை செயற்படுத்தவே நாம் விரும்புகிரேும். ஊழலற்ற அரசை நாம் அமைப்போம்' என்ருர்.



### சவான்

இதேவேளை தமிழ் நாட்டில் தேர்கல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசுகையில், 'லோகசபாத் தேர்தலின் போது காங்கிரஸ் மீது மக்களுக்கு ஏற்பட்டது தற்காலிகமான கோபம் தான். காங்கிரஸுக்குஒரு பாடம் கற்பிக்கவேண்டும் என்று அவர்கள் நினைத்தார்கள். இப்போது அக்கோபம் நீங்கிவிட்டது' என்ருர். (உ)

லண்டன் மாநாடு:

## "நீங்கள் கலந்துகொள்வது உசிதமானது அல்ல"

### இடிஅமினுக்கு கலகன் கடிதம்

லண்டன், ஜூன். 2

லண்டனில் நடைபெறவிருக்கும் பொதுநலநாடுகள்மாநாட்டில் உகண்டா ஜனதிபதி திரு. இடி அமின் கலந்துகொள்வது உசிதமானதல்ல என்று பிரிட்டிஷ் பிரதமர் திரு. கலகன் திரு. இடிஅமினுக்குகடிதமூலம் தெரிவித்துள்ளார்.

திரு. இடி அமினை லண்டன் மாநாட்டில் கலந்து கொள்ள அனுமதிப்பதாஎன்பதுகுறித்து திரு. கலகன் தமது அமைச்சரவையைக்கூட்டி சமீபத்தில் இரகசிய ஆலோசனை நடத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

### பத்துக்கோடி வயதுள்ள பாதச்சுவடு!

மாஸ்கோ, ஜூன் 2

பத்துக்கோடி வருடங்களுக்கு முன்பு வாழ்ந்ததாக கணிக்கப்படும் டையனேசர்இன பாதச்சுவடு ஒன்று சோவியத் நாட்டின் டஜிக்கிஸ்தான் பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக டாஸ் செய்தித்தாபனம் அறிவித்துள்ளது.

இக்கண்டு பிடிப்பு உலகினதும் உயிரினங்களினதும் தோற்றம் பற்றிய ஆராய்ச்சியில் ஒருமைல் கல்லாக அமையும் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர் (கி)

ராஜன் மரணம்:

## "பொய்யான தகவலைத் தந்தது ஏன்!" மாஜிமுதலமைச்சரிடம் நீதிமன்றம் கேள்வி

திருவனந்தபுரம், ஜூன். 2

"கோழிக்கோடு என்ஜினியரிங் மாணவர் ராஜன் மரணம் தொடர்பாகபொய்யான சத்தியக்கடதாசி சமர்ப்பித்த குற்றத்திற்காக ஏன் உங்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்குக்காரணம் காட்டுங்கள்'' என்று கேரள உயர்நீதிமன்றம் முன்ஞள் கேரளமுதலமைச்சர் திரு. கருணகரன் உட்பட இவ்வழக்கின் பிரதிவாதிகளைக்கேட்டுள்ளது.

பொலிஸ்பாதுகாப்பில்இருக்கையில் மாணவர் ராஜன்இறந்தது தெரிந்ததே. பொலிஸ் பாதுகாப்பில் இருக்கையில் தான் ராஜன் மரணமாஞர் என்பதை முன்னர் மறுத்திருந்த திரு. கருணகரன்பின்னர் ஒற்புக்கொண்டார்.

இக்கேள்விக்கு பதிலளிப்பதற்கு புதன்கிழமைவரை உயர் நீதிமன்றம் அவகாசமளித்துள்ளது. (உ)

## "ஏழைமக்களின் அன்பை பெற்றது எம்.ஜி.ஆர். கட்சி"

### மார். கம்யூ. செயலாளர்

சென்னை, ஜூன். 2

"திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போது கீழ் மட்டத்தில் இருந்து மேல்மட்டம் வரை லஞ்சம் தலைவிரித்தாடியது. மக்கள் பொலிசாரால் காரணமின்றித் தாக்கப்பட்டனர். அரசாங்கஅதிகாரம் கட்சி நலனுக்குப் பயன்படுத்தப்பட்டது'' என்றுநேற்றிரவு வாஞெலிமூலம் தமதுதேர்தல் பிரசாரத்தை நடத்திய மார்க்ஸிஸ்ட கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலகுழுச் செயலாளர் திரு. ஏ. பாலசுப்பிரமணியம கூறிஞர்.

"எம். ஜி. ஆர். தலைமையிலான அனைத்திந்திய அண்ணு திராவிட முன்னேற்றக்கழகம் முற்றிலும் ஏழை எளிய மக்களின் அபரிமித அன்பைப் பெற்ற கட்சி. எனவே தான் இக்கட்சியுடனும், முஸ்லீம்லீக் உழைப்பாளர்கட்சி, பார்வாட் பிளாக் ஆகிய கட்சிகளுடன் நாம் தேர்தல்உடன்பாடுவைத்துக் கொண்டோம்'' என்ருர் அவர்.

### பிரதமரின் கூற்றை ஏற்கமுடியாது

அவர்தமதுஉரையில் மேலும் கூறியதாவது: "காங்கிரஸ் கட்சி நலிவு அடைவதைத் தான் விரும்பவில்லை என்கிருர் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய். 'லோக்சபாதேர்தலில் தோல்வியடைந்து விட்டதால் காங்கிரஸ்கட்சியிஞல் ஏற்படும் ஆபத்து நீங்கிவிட்டதென்று அர்த்தமாகாது. ஆபத்துஇல்லை என்று கூறுவது சிறுபிள்ளைத்தனமானது. நாட்டில் இரு கட்சிமுறை இருக்கவேண்டும் என்று ஜனதாகட்சி கூறுவது ஏற்றுக்கொள்ளமுடியாதது.

### இஸ்ரேல் மறுப்பு

லண்டன், ஜூன். 2

தெற்கு லெபஞனில் தான் ஊடுருவல் செய்து வருவதாக சுமத்தப்பட்டகுற்றச்சாட்டை இஸ்ரேல் மறுத்துள்ளது.

தெற்கு லெபஞனில் இஸ்ரேல் ஊடுருவல் செய்வதாக பெய்ரூட் குற்றம் சுமத்தியிருந்தது. (உ)

### ஜனதாவுக்கு ஏமாற்றமே கிடைக்கும்

தமிழ்நாட்டில் ஜனதா கட்சிக்கு கிடைக்கப்போவது ஏமாற்றம்தான். ஜனதாகட்சி ஆட்சி அமைத்தும் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. மிசா சட்டம் ஒழிக்கப்படாதது ஆச்சரியத்தையளிக்கிறது''. (உ)

றெடீஷிய — மொஸாம்பிக் சண்டை:

## பாடசாலைகள், ரயில்கள் மீது

### றெடீஷியத் துருப்புகள் குண்டுவீச்சு

மொஸாம்பிக், ஜூன் 2

றெடீஷியத் துருப்புகளுக்கும் மொஸாம்பிக் துருப்புகளுக்கும் இடையில் மாபாய் என்ற இடத்தில் கடும் சண்டை நடைபெற்று வருவதாக அறிவிக்கப்படுகிறது.

றெடீஷிய இராணுவத்தினர் மொசாம்பிக்கில் பாடசாலைகள், ரயில்கள், மக்கள் அதிகமாக கூடியிருக்கும் இடங்கள் ஆகியவற்றில்குண்டு வீச்சு நடத்துவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. றெடீஷிய விமானம் ஒன்று சுட்டு விழ்த்தப்பட்டதாக மொஸாம்பிக் அறிவித்தது.

இதுவரை மூன்று விமானங்களும், ஒரு ஹெலிகொப்டரும் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளன.

## தவருன செய்திகளை பிரசுரிக்கும் அளவுக்கு ஜனதா அரசு சுதந்திரம்"

— பாரதப் பிரதமர்

புதுடில்லி, ஜூன் 2

"பத்திரிகைகள் தவருன செய்திகளைப் பிரசுரிக்கும் அளவுக்கு பத்திரிகைகளுக்குஜனதா அரசு பதவியேற்றபின் சுதந்திரம் அளித்துள்ளது'' என்று பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் கூறிஞர்.

புதுடில்லியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறிஞர். 20 மாதங்களாக இருந்து வந்த அவசரகால நிலையை நீக்கி நீதித்துறையிலும் மற்றும் பல வழிகளிலும் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றியது ஜனதா அரசு என்ருர் பிரதமர்.

பிரதமர் தொடர்ந்து பேசுகையில் "மக்கள் எவ்வித அச்சமுமின்றி அரசு ஏதும் குற்றமிழைத்தால் அதனைச் சுட்டிக்காட்டவேண்டும்''என்ருர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## அங்கோலா மீது படையெடுப்பா?

### இல்லை என்கிறது செனகல்

லண்டன், ஜூன் 2

அங்கோலா மீது தான் படையெடுப்பு நடத்தத் திட்டமிட்டுள்ளதாக வெளிவந்த செய்தியை செனிகல் மறுத்துள்ளது.

சுதந்திர ஆபிரிக்க நாடு ஒன்றுக்கு எதிராகப்படையெடுப்பு நடத்தும் எண்ணம் தனக்குக் கிடையாது என்று செனகல் அரசு மேலும் தெரிவித்துள்ளது. (உ)

### கைத்தொழிலில் சீன இராணுவம்

பீக்கிங், ஜூன் 2

சீன இராணுவத்தினர்கைத்தொழில் துறையிலும் கவனம் செலுத்த வேண்டும் என்று சீன அரசு இராணுவத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது, (உ)

'காங்கிரஸ் ஆட்சிக்கு

## ஆதரவளித்த எம். ஜி. ஆர். கட்சிக்கு வாக்களிப்பதா?"

சென்னை, ஜூன். 2

"அவசரகால நிலையைப் பிரகடனம் செய்து இன்னல் பல நிகழ்வதற்குக் காரணமாக இருந்த காங்கிரஸ் ஆட்சிக்கு ஆதரவளித்த அனைத்திந்திய அண்ணுதிராவிடமுன்னேற்றக் கழகத்திற்கு தமிழகமக்கள் ஆதரவளிக்கக்கூடாது'' என்று மத்திய ரயில்வே அமைச்சர் திரு. மதுதண்டவதே சென்னை

(4ம் பக்கம் பார்க்க)

# அகிம்சைவழியில் அரசியலை தூய்மைப்படுத்தியவர்!

## தந்தை செல்வாவுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், வெள்ளி "இந்த அரசாங்கத்தை எதிர்த்து சேவையாற்றியதை விட, அரசாங்கத்தை ஆதரித்தவர்கள் குறைந்த சேவையையே இந்நாட்டு மக்களுக்குச் செய்துள்ளனர்" என்று முன்னை நாள் ஊர்காவற்றுறை தேசிய பேரவை உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் நெடுந்தீவில் நடைபெற்ற செல்வா அஞ்சலிக்கூட்டத்தில் கூறினார். இக்கூட்டம் நெடுந்தீவு மேற்கு, கெழுவினி ஆலய முன்றலில் திரு. கா. கோபாலபிள்ளை தலைமையில் நடைபெற்றது.

பண்டிதர் கா. பொ. இரத்தினம் பேசுகையில் தந்தை செல்வா அகிம்சைவழியில் நம்பிக்கைவைத்து அரசியலை தூய்மைப்படுத்தியவர். அவரால் வளர்க்கப்பட்ட விடுதலைக்கூட்டணிப் பிரமுகர்கள் அனைவரும் அறவழியில் அரசியலைநடாத்துபவர்கள். நாம்விடுதலையென்ற புனிதமான கொள்கைக்காக போராடுகின்றோம். எனவே இந்நாட்டு மக்கள் குறிப்பாக எனது தொகுதி மக்கள் விடுதலைவிரும்பிகள், சிலர் கருதுவதுபோல் விடுதலை உணர்வைக் குறைக்கலாமென்று கருதினால் அவர்கள், செல்வாவின் கொள்கையை ஏற்காதவர்கள் செல்வா இறக்கும் தறுவாயில் தேசியப் பேரவையில் தமிழ் ஈழத்தினால் மட்டுமே நமது தேசிய இனத்தைக் காப்பாற்றலாமெனக் கூறினார். 56ம் ஆண்டே திரு. சுந்தரலிங்கம், திரு. தியாகராஜா போன்ற நண்பர்கள், தமிழனுக்கு தனி இராச்சியம் தேவையென கூறியபோதும், அதை சிங்கள கட்சிகள்சிந்திக்கவில்லை. அதை ஒரு அரசியல் கருத்தாக மதிக்கவில்லை. தந்தைசெல்வா தேசிய பேரவையில் திட்டவட்டமாக கூறியதும். அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா இது ஓர் யுத்தப் பிரகடனம் என கூறினார்.

தந்தை செல்வாவின்கருத்தே தமிழ் தேசிய இனத்தின் கருத்தென்ற நிலையாக பெரும்பான்மையினம் கருதுகின்றது. நாம் அவருக்கு செய்யும் அஞ்சலி, கடமை, கண்ணியம், கட்டுப்பாடுகாத்து அகிம்சைவழியில் விடுதலைக்குபோராடுவதே" என்று கூறினார்.

நெடுந்தீவு மகாவித்தியாலய அதிபர் திரு. இரா. சின்னத்தம்பி பேசுகையில், 'ஒருதேசிய இனம் எப்படி சுயநிர்ணய உரிமையை பெறுவதற்கு, அந்த வழியில் போராடி வெற்றி காணமுடியும் என்பதை வாழ்நாள் பூராவும் தியாகம்செய்து உழைத்தமகான் தந்தை செல்வா 20ம் நூற்றுண்டில் அரசியலுக்கு, அறவழியில் கொள்கைப்பற்றுடன் மன உறுதியுடன் உழைத்த ஒப்பற்ற தேசப்பிதா' என்றார்.

திரு. சு. நடராஜலிங்கம் பேசுகையில், 'தந்தை இல்லாமல் நடைபெறுகின்ற முதலாவது தேர்தலை நாம் இன்று சந்திப்பதால், அவருக்கு நாம் செலுத்துகின்ற அஞ்சலி அவர் கூறிய சர்வஜன வாக்கெடுப்பாக மிகத்தீவிரத்துடன் உழைத்து ஒற்றுமையை உலகறியச்செய்து புகழ்பரப்புவோம் என்றார்.

திருவாளர்கள் கா. சாந்தலிங்கம், எஸ். சிவலிங்கம், தர்மலிங்கம் உட்பட பலர் உரையாற்றினர். (செ)

## வேலரும் மயிலரும்




மயிலர்: கலியாண வீட்டுக்கு நாலு வேட்பாளரும் வந்தவையாம். ஆருக்கு வோட்டுப் போடுறதெண்டு தெரியவில்லையாம்.

வேலர்: மாப்பிள்ளை ஒரு வேட்பாளருக்கு, பெண் ஒரு வேட்பாளருக்கு, தோழன் ஒரு வேட்பாளருக்கு, தோழி ஒரு வேட்பாளருக்கு வோட்டைப் போட்டால் பிரச்னை முடிந்தது.

— சுந்தர்

## "குழாய்நீர் விநியோகத் திட்டம் வேண்டும்"

### புலோலி ப.நோ. கூ.ச. தலைவர் கோரிக்கை

உடுப்பிட்டி, வியாழன் "பருத்தித்துறைத் தொகுதியில் உள்ள அல்வாய் மேற்கு, திக்கம் பகுதியில் குழாய்நீர் விநியோகத் திட்டம் உடனடியாக ஆரம்பிக்கவேண்டும். இதன் மூலம் சுமார் ஐயாயிரம் மக்கள் விமோசனம் பெறுவர்"

இவ்வாறு கோரும் கடிதம் ஒன்றைப் புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. கே. ரி. இராசசிங்கம் நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ளார்

அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது: "அல்வாய் தெற்கு, திக்கம் கிராமம் பருத்தித்துறைத் தொகுதியில் பின்தங்கிய நிலையில் உள்ளது. இதுவரை காலமும் எவரும் இக்கிராம அபிவிருத்தியில் கவனம் செலுத்தவில்லை. இக்கிராமத்தில் குடிதண்ணீர்த் தட்டுப்பாடே பெரும் பிரச்னையாக இருந்துவருகிறது. ஐயாயிரம் மக்கள் இதனால் குடிப்பதற்கு நல்ல தண்ணீர் இன்றித் தூர இடங்களுக்குத் தினமும் நடைபவனி சென்று அவதியுற்று வருகின்றனர். இங்கு மூன்றே மூன்று கிணறுகள் மட்டுமே நல்ல தண்ணீரைக் கொண்டுள்ளன. ஏனைய கிணறுகள் யாவும் உவர்நீராக உள்ளன. மூன்று நல்ல தண்ணீர்க் கிணறுகளும் இக்கிராம மக்களின் குடிதண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்யமுடியாத நிலையில் உள்ளன. ஆதலால் இக்கிராம மக்களின் குடிதண்ணீர்க் கஷ்டத்தைப் போக்க அல்வாய் மேற்கு திக்கம் பகுதிக்குக் குழாய்நீர் விநியோகத் திட்டத்தை ஆரம்பித்துக் குழாய்நீர் விநியோகம்செய்து இப்பகுதி மக்களுக்கு உதவவேண்டும்" என்று அவர் கோரியுள்ளார்.

ஆயுர்வேதக் கல்லூரி

## நிர்வாக அதிகாரியின் ராஜினமாவுக்கு வரவேற்பு

### மாணவர் தலைவர் அறிக்கை

யாழ்பாணம், வெள்ளி யாழ் லங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியின் நிர்வாக அதிகாரி டாக்டர் அ. கெங்காதரன் நிர்வாக அதிகாரி, பதிவாளர் ஆகிய பதவிகளில் இருந்து ராஜினா செய்தது வரவேற்கத்தக்கது என்று மேற்படி கல்லூரி மாணவர் சங்கத் தலைவர் திரு, கே. வி. கே. திருலோகமூர்த்தி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

"நிர்வாக அதிகாரி ராஜினமாச் செய்யக்கோரி கல்லூரியின் 91 மாணவர்கள் ஒப்பம் இட்டு கோரிக்கை விட்டதும் தொடர்ந்து கல்லூரியைபகிஷ்கரித்து வந்ததும் மாணவர் குழுவினர் உண்ணாவிரதம் இருந்தும் எமது மாணவர்களின் ஒன்றுபட்ட ஐக்கியத்திற்கு எடுத்துக்காட்டாகும். கல்லூரியின் அபிவிருத்தியிலும் மாணவர்களின் நலனிலும் இனிவரும் நிர்வாகப் பொறுப்பாளர்கள் கூடிய கவனம் செலுத்த வேண்டும். தனி மனித ஆதிக்கத்தில் இருந்து கல்லூரி விடுபட்டு நிர்வாகம் பரவலாக்கப்பட வேண்டும். இழந்து போனஅங்கீகாரத்தை மீண்டும் பெறவும் புதிய நிர்வாகிகள் அயராது உழைக்க வேண்டும். புதிதாக வருபவர்களுக்கு எமது பூரண ஆதரவு உண்டு" என்று மாணவர் சங்கத்தலைவர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேற்படி உண்ணாவிரதம் கடந்த செவ்வாய்கிழமை முடிவடைந்தது தெரிந்ததே.

### பேச்சுவார்த்தை

அன்றுமாலை கல்லூரியின் இயக்குநர் சபைத்தலைவர் டாக்டர் எம். அருளானந்தம் தற்காலிக இயக்குநர் சபைச் செயலாளர் டாக்டர் விசாகரத்தினம் ஆகியோர் மாணவர்களின் கோரிக்கை தொடர்பாக மாணவர் சங்கத் தலைவர் திரு. கே. வி. கே. திருலோகமூர்த்தி செயலாளர் திரு. ச. தவசிலன் ஆகியோருடன் பேச்சுவார்த்தை ஒன்றினை நடத்தினார்கள்.

நிர்வாக அதிகாரி தமது பதவிகளில் இருந்து ராஜினமாச் செய்தால் ஒழிய மாணவர் குழுவினர் தமது உண்ணாவிரதத்தை கைவிடமாட்டார்கள் என்று பேச்சுவார்த்தையின் போது மாணவர் சங்கத்தினர் குறிப்பிட்டனர்.

இப்பேச்சு வார்த்தைகளின் போது அரசாங்க லிகிதர் சேவைச்சங்கத்தை சேர்ந்த திரு! வ. பொன்னம்பலம், திரு. அருளம்பலம், திரு. அன்ரன், டாக்டர் எஸ். பி. அத்தனுசியர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நிர்வாக அதிகாரியை ராஜினமாச் செய்யக்கோரி பெரும் தொகையான பொதுமக்களும் கல்லூரியை முற்றுகையிட்டிருந்தனர், அவர் இரவு 10 மணிக்கு ராஜினமாச் சமர்ப்பித்ததைத் தொடர்ந்து மாணவர்களின் உண்ணாவிரதமும் கல்லூரி பகிஷ்கரிப்பும் கைவிடப்பட்டது. உண்ணாவிரதத்தை ஆரியகுளம் முற்போக்கு வாலிபர் கழக தலைவர் திரு. மா. செல்வராசா பழரசம் கொடுத்து முடித்து வைத்தார். (ஊர்-உ)

## காங்கிரஸ்—

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆயிரம்விளக்குத் தொகுதியில் நடைபெற்ற தேர்தல்பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

"காங்கிரஸ் ஆட்சியில் நடைபெற்ற துன்பங்கள் அனைத்துக்கும் இந்திரா காந்தியே காரணம்" என்றார்அவர்.

அவர் மேலும பேசுகையில், "ஜனதாகட்சிதான் உண்மையான மக்கள்கட்சி.பிராந்தியக் கட்சிகளுக்கு ஆதரவளிப்பதால் மக்கள் நன்மைபெறமுடியாது. மக்களின் அபிலாஷைகளை ஜனதா அரசுபுரிந்து கொண்டுள்ளது. அவற்றை நிறைவேற்ற அரசுபாடுபடும்" என்றார். (உ)

## தவறுன—

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

### ஜெய்ப்பூரில் காங்.தலைவர்

இதேவேளை ஜெய்ப்பூரில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் காங்கிரஸ் தலைவர் திரு. பிரமானந்த ரெட்டி பேசுகையில் "மத்தியிலும், மாநிலங்களிலும் ஒரே கட்சி ஆட்சி உருவாவது ஜனநாயக நலனுக்கு உகந்ததல்ல" என்று கூறினார்.

## 'இளைஞர்கள் விழிப்பாக இருக்கவேண்டும்'

நெல்லியடி,வியா. "இன்றைய மாணவர்கள் பலவித அலைகளினால் தாக்கப்பட்டுசமுதாயத்தின் இழிநிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்பலசக்திகளும் செயற்பட்டுவருகின்றன. இவற்றிற்கு மாணவர்கள் இடம் கொடுக்கக்கூடாது விழிப்பாக இருக்கவேண்டும்."

இவ்வாறு நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியின் வருடாந்த இராப்போசன விருந்து வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட நீதிபதி திரு. கே. வீ. நவரத்தினம் கூறினார்.

மாணவர் மன்றத்தலைவர் திரு. மு. சதானந்தன் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் நீதிபதி திரு.கே. வீ. நவரத்தினம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

இறைவன் படைத்த உலகில் அதன் இன்பங்களை நீதியையும் அறத்தையும் அடிப்படையாகக் கொண்டு எல்லோரிடமும் பகிர்ந்து அனுபவிக்க மாணவர்கள் பழகிக் கொள்ள வேண்டும். மாணவர்களுடைய உள்ளம்களங்கமற்றதாக எல்லோரிடமும் அன்பு காட்டுவதாக, வேறுபாடு அற்றதாக அமைதல் வேண்டும். விளையாட்டு மைதானங்களில் விளையாட்டுப் பயிற்சியைப் பெறுவதைப்போல, இவ்விருந்து வைபவங்களில் இவற்றை மாணவர்கள் பெற்றுக் கொள்ளவேண்டும் என்றார்.

யாழ். கல்வி அதிகாரி திரு. க. நவரத்தினம் இவ்வைபவத்தில் பேசுகையில் "மாணவர்கள் புத்தகப்படிப்போடு நின்றுவிடாமல் வாழ்க்கையில் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்பதைப் படிக்கவேண்டும். அத்துடன் அன்பு, சமூக உறவு விருந்தோம்பல், சகோதரத்துவம் போன்ற நற்பண்புகளையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்" என்றார்.

இவ்வைபவத்தில் திரு. சு. பரமேஸ்வரனும் பேசினார்.


∴ உறுதியானதும்
∴ நீடித்து உழைப்பதும்
∴ தன்னிகரற்றதுமான

# வைத்திலிங்கம்ஸ்

இரும்பு — பித்தளை — மரஸ்குறு ஆணிகளை

நீங்கள் வாங்குவதனால்

ஒரு சிறந்த பொருளை வாங்குவதோடு உள்நாட்டு உற்பத்தியையும் வளர்க்கின்றீர்கள் என்பதை மறவாதீர்கள்

என். வைத்திலிங்கம் நிறுவனத்தார்

இரும்பு வியாபாரிகள்

450, பழைய சோனகதெரு, கொழும்பு - 12

தொலைபேசி: 33143 — 4

கிளை: 138, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 530

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-சரோஜாதேவி
**இருவர் உள்ளம்**

**புலோலி சினிமாஸ்**
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-30
சனி, ஞாயிறு 10-30
ஜெமினி—சரோஜாதேவி
**பணமா பாசமா**

**REGAL** Daily: 4-45, 7-00 & 9-30 p. m.
(JAFFNA)
Leslie Phillips in
**"DOCTOR IN TROUBLE"**
(Color)

**வெலிங்டன்** ரஞ்சன்
(யாழ். நகர்) நடித்த
தினசரி 3, சனி ஞாயிறு 4 காட்சிகள்
**நீலமலைத்திருடன்**

**லிடோ** போன்: 7693 டி.எம்.சௌந்தரராஜன்
(யாழ். நகர்) நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45,
**அருணகிரிநாதர்**
6-ம் திகதி முதல்
**வடிவுக்கு வளைகாப்பு**

**ஸ்ரீதர்** முத்துராமன் – சுந்தரராஜன்
(யாழ்ப்பாணம்) பாரதி
தினசரி 4 காட்சிகள் நடித்த
**தெய்வச்செயல்**
10-6-77 முதல்
சிவாஜி கணேசனின் **வைர நெஞ்சம்**

**RIO** (Jaffna) Daily 10-30, 4-45, 7-15 & 9.45
**RUSSIAN ROULETTE**
Thrilling - Exciting - Demanding
(சில நாட்களுக்கு மட்டும்)

**வின்ஸர்**
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன், உஷா நந்தினி,
(இருவேடங்களில்) சௌகார் ஜானகி
**மனிதனும் தெய்வமாகலாம்**
(ஈஸ்ட்மன் கலர்)

கடைசி வாரம்
**மனோகரா** எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா
விரப்பா - நிர்மலா
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் நடித்த
**இதயக்கனி**
(ஈஸ்ட்மன்கலர்)

**ராணி** எம். ஜி. ஆர். — லதா
(இருவேடங்கள்) நடித்த
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
**நாளை நமதே**
(ஈஸ்ட்மன் கலர்)


## நடனநிகழ்ச்சி

இமையாணன், வெள்ளி

கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலை நடத்தும் நடன நிகழ்ச்சி இன்று வெள்ளிக்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது கலைஞர் வேல் ஆனந்தனும் மாணவர்களும் இந் நிகழ்ச்சியில் பங்கு கொள்கின்றனர். (அ)

## இன்று பரிசளிப்புவிழா

சுழிபுரம், வியா

"நிலையக்குரல்" ஆதரவில் நடாத்தப்பெற்ற கந்தரநுபூதிப் போட்டி பரிசளிப்புவிழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் பணுலை சிவசுப்பிரமணியசுவாமி கோவில் மண்டபத்தில் நடைபெறும். விழாவுக்கு கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை முன்னாள் அதிபர் திரு. சி. விசுவலிங்கம் தலைமை வகிப்பார்.

## கூட்டணிக் கிளை நிர்வாகிகள்

வேலணை, வியாழன்

மண்கும்பான் தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளைக் கூட்டம் பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். தலைவர்; ம. சங்கரலிங்கம், செயலாளர்: இ. செல்லப்பா, உப-செயலாளர்: ஆ. சின்னத்துரை, பொருளாளர்: வை. கனகலிங்கம். 7 பேர்கள் நிர்வாக சபைக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

## மகாஜன வருட இல்லப் போட்டி

யாழ்ப்பாணம், வெள்ளி

மகாஜனக் கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டிகள், நாளை கல்லூரி விளையாட்டரங்கில் வைத்திய கலாநிதி சி. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும். திருமதி ஜெகசோதி சிவசுப்பிரமணியம் பரிசுகளை வழங்குவார்.

## வித்துவான் வேலன் கட்டுப்பணம்

யாழ்ப்பாணம், வெள்ளி

மானிப்பாய்த் தொகுதியில் போட்டியிடும் தமிழ் சோஷலிஷக் கூட்டாட்சிக் கட்சி அமைப்பாளர் வித்துவான் வேலன் இன்று தமது கட்டுப்பணத்தை செலுத்தவிருக்கின்றார்,

இன்று மாலை மானிப்பாய் வரதவிக்கினேஸ்வரஆலயத்தில் நடைபெறும் விசேட ஆராதனையுடன் தமது தேர்தல் பிரசாரத்தை ஆரம்பிப்பார். உடுப்பிட்டி தொகுதியில் கூட்டணி வேட்பாளர் திரு. இராசலிங்கத்தை ஆதரிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.


**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
விஜயகுமார்-சுஜாதா
**அவள் ஒரு தொடர்கதை**


## முதல் வருட பரீட்சை

யாழ்ப்பாணம், வெள்ளி

வித்தியோதய வளாகத்தில் முன்னர் நடைபெறவிருந்த வர்த்தகப் பட்டப்படிப்பு மாணவர்களுக்கான முதல் வருடப் பரீட்சை விரிவுரையாளர்களின் வேலை நிறுத்தத்தால் ஒத்தி வைக்கப்பட்டிருந்தது. இப்பரீட்சை நேற்று முன்தினம் முதல் நடைபெற்று வருகின்றது. இப்பரீட்சை தொடர்ந்து ஆறு நாட்களுக்கு வளாக மண்டபத்தில் நடைபெறும் இப்பரீட்சைக்கு வெளிவாரி, உள்வாரி மணவர்கள் தோற்றுகின்றனர்.


**JAFFNA COLLEGE**

Wanted qualified teachers for Physics and Mathematics for the G. C. E. Advanced Level and H. N. C. E. classes in the Tamil Medium. Please apply before the 15th of June on forms available at the College office.

Principal.
Vaddukoddai. 6343

## வரி விளம்பரம்

**தட்டச்சு**

உங்களுக்குத் தேவையான ஆங்கில பிரதிகள், விண்ணப்பங்கள், கடிதங்கள் எதுவாயினும் (Type) அடித்துக் கொடுக்கப்படும். கீழ்க்காணும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். சி, பகீதரன். 443, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 6345

**தேவை**

வண்ணார்பண்ணை – கந்தர் மடம்-நல்லூர் பகுதியில் போக்குவரத்திற்கு வசதியாக வீடு ஒன்று சகல வசதிகளுடனும் வாடகைக்குத் தேவை. விண்ணப்பிக்கவும். வாணி 52, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 6344

காஸ் வெல்டிங், கம்மாலை வேலை, லேத்வேலை தெரிந்தவர்களும் மேற்பார்வையாளர்களும் தேவை. எழுதிய விண்ணப்பத்துடன் நேரில் வரவும். ராதா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 6336

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்
(வரைவுள்ளது)
சுன்னாகம்

## வெற்றிடம் II-ம் தர பொதுமுகாமையாளர் பதவி

மேற்குறிப்பிட்ட பதவி சம்பந்தமாக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

| | |
|---|---|
| வசிப்பிடத் தகைமைகள்: | குறைந்தளவு 2 வருட காலமாவது அந்த மாவட்ட எல்லைக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும், |
| வயது: | 23-க்கும் — 50-க்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். |
| சம்பளம்— | 500/- — 825/- / 20 10, 25 5 |

தேவையான தராதரங்கள், மற்றும் தகைமைகள் பற்றிய விளக்கங்கள் யாவையும் பெறுவதற்காக கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுத்து மூலமோ அன்றேல் நேரடியாக வந்தோ ரூபா 1/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலம் பெறவேண்டின் முத்திரையொட்டப்பட்ட சொந்த முகவரியிடப்பட்ட கடித உறை அனுப்பப்படல் வேண்டும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும். பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்களை 30-6-1977க்கு முன் அனுப்பி வைத்தல் வேண்டும்.

தலைவர்

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்.

6342

## முக்கிய பிரகடனம்

மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்குரிய ஆதனங்களுள், குத்தகையாகவும், கடைக்காரர்களாகவும், மடாதிபதிகளாகவும் வேறு சாட்டுகளோடு இருப்பவர்களும் உடனடியாக தற்போதுள்ள ஆதீனகர்த்தா பிரமஸ்ரீ சு. து. ஷண்முகநாதக்குருக்கள் அவர்களிடம் தொடர்பு கொண்டு தத்தம் ஒப்பந்தங்களைப் புதுப்பிக்குமாறு இத்தால் அறிவிக்கப்படுகிறது. காலம் சென்ற ஆதீனகர்த்தா பிரம்மஸ்ரீ சு. துரைச்சாமிக் குருக்கள் அவர்களுடன் சேர்ந்து ஆக்கப்பட்ட ஒப்பந்தங்கள் யாவும் ரத்துச்செய்திருப்பதோடு சட்டப்படி செல்லுபடியாகாதெனவும் இத்தால் அறிவிக்கின்றேன்.

சு. து. ஷண்முகநாத குருக்கள்
ஆதீனகர்த்தா

6346


"திருவருள்" புரியும் பக்திரசமான 4-வது வாரம்
**ராஜா** (யாழ்நகர்) போன்: 7180 தினசரி 4 காட்சிகள் ஏ.வி.எம்.ராஜன், கிருபானந்தவாரியார்
நாகேஷ், சுந்தரராஜன், நடித்த
தேவரின் **திருவருள்** (ஈஸ்ட்மன் கலர்)
குறிப்பு: பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்குசெய்துகொள்ளலாம்.

**சிந்தெட்டிக் கற்பூரம் பெட்டிகளில்**
கிடைக்குமிடம்:
**சென்ற் அந்தனிஸ் ஹாட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்**
516, ஸ்கின்னர்ஸ் றோட்டுத் தெற்கு,
கொழும்பு - 10
போன்: 24261-5

ஈழநாடு
The EELANADU

# "பங்களாதேஷில் முடியுமானல் ஏன் இங்கு முடியாது?
# தமிழ்மக்கள் ஒன்றுபட்டால் 3 வருடத்தில் தமிழ்ஈழம்"

— வி. குமாரசுவாமி

யாழ்ப்பாணம், வெள்ளி

"தமிழ்பேசும் மக்கள் உண்மையாகவும், நேர்மையாகவும், விஸ்வாசத்தோடும் ஒன்றுபட்டு முழுசக்தியையும் பயன்படுத்திஞல் மூன்றுவருடகாலத்திற்குள் 'தமிழ்ஈழம்' பெறமுடியும்.

கோண்டாவிலில் தமிழ்ஈழ ஜி. ஜி. காங்கிரஸ் தலைமை காரியாலயத்தைத் திறந்து வைத்துப்பேசிய சாவகச்சேரி ஜி. ஜி. காங்கிரஸ் வேட்பாளர் திரு. வி. குமாரசுவாமி மேற்கண்டவாறு கூறினுர்.

## "மூன்று வருடத்தில் தமிழ் ஈழம்"

ஜி. ஜி. காங்கிரஸ் தலைவர் திரு. ஆர். என். சிவப்பிரகாசம் தலைமையில் நடந்த இவ்விழாவில் திரு. வி. குமாரசுவாமி மேலும் கூறியதாவது:

"பங்களாதேஷில் பொதுத்தேர்தல் நடந்து இரண்டுவருடகாலத்திற்குள், தனிநாடுகாண முடியுமாஞல், இங்கும், தேர்தல் நடந்த மூன்றுவருடகாலத்தில் ஏன் 'தமிழ் ஈழம்' காணமுடியாது? தமிழ்ஈழம் பெறுவது முடியாத காரியமல்ல. தமிழ்மக்கள் யாவரும் ஒன்றுபட்டு 'தமிழ் ஈழம்' தான் ஒரே வழி என்ற எண்ணத்துடன் செயலில் இறங்கிஞல் 3 வருடகாலத்தில், தமிழ் ஈழத்தை பெறமுடியும்.

"1956-ம் ஆண்டு நான் 'தனித்தமிழ்நாடு' கொள்கையை முன்வைத்துப்போட்டியிட்டேன் அன்று தமிழ் மக்கள் 'தனிநாடு' பெறக்கூடிய பக்குவநிலையை அடையாத காரணத்திஞல் என் கொள்கைக்கு ஆதரவுகிடைக்கவில்லை. ஆஞல் இன்று தமிழ் மக்கள் எல்லோரும் 'தமிழ் ஈழம்' தான் ஒரே வழி என்ற நிலைக்குவந்து விட்டார்கள். இதிலிருந்து ஒரு அங்குலமும் பின்வாங்கமாட்டார்கள்.

### அமரரின் இலட்சியம்

அமரர் ஜி. ஜி. யின் இறுதி இலட்சியமான 'தமிழ்ஈழத்தை பெற ஜி. ஜி. காங்கிரஸ் சகல முயற்சிகளையும் எடுக்கும். தேர்தலின் பின்னரும் ஜி. ஜி. காங்கிரஸ்' ஒருவிடுதலை இயக்கமாக, லட்சியத்தைப் பெறும் வரை போராடும்.

மானிப்பாய் தொகுதி ஜி. ஜி. காங்கிரஸ் வேட்பாளர் திரு. இ. முதலியார் பேசுகையில் கூறியதாவது" "இத்தேர்தலில் நாம் வெற்றிபெற்ருல் மட்டும் போதாது. ஜி. ஜி. காங்கிரஸ் வேட்பாளர்கள் யாவரும் ஒரு லட்சத்துக்கு மேலாக வாக்குகள் பெற்ருல் தான் அதுநம் வெற்றியாகும்.

நல்லூர் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் திரு. க. இராமநாதன் பேசுகையில் கூறியதாவது: 'தமிழ் ஈழம்' எங்கள் மூச்சாக இருக்கவேண்டும். தமிழ்மக்கள் குறிப்பாக வாலிபர்கள் தமிழ் ஈழத்தைப் பெறுவதற்காகன இயக்கங்களில் பங்குபற்றத் தயாராகவேண்டும். கால் நூற்றுண்டுக்கு மேலாக தமிழினத்திற்கு உழைத்த அமரர் ஜி. ஜி. க்கு கைமாறுசெய்யவேண்டுமாஞல் நாம், அவரின் லட்சியமான தமிழ் ஈழத்தைப்பெற வேண்டும்.

திரு. வி. ஸ்ரீஸ்கந்தராசா, திரு. ஆர். பரமேஸ்வரன், திரு. சு. கனகரத்தினம் ஆகியோரும் பேசினுர்கள். (க)

## "எம். ஜி. ஆர். கட்சியின் திடீர்போக்கைமக்களறிவர்"
### சவான் சொல்கிருர்

சென்னை, ஜூன் 2

"லோக்சபா தேர்தலின் போது காங்கிரஸ் கட்சியுடன் உடன்பாடு செய்து கொண்ட அனைத்திந்திய அண்ணு திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்வரும் சட்டசபைத் தேர்தலில் தம் போக்கினைத் திடீரென மாற்றிக் கொண்டது ஏன் என்பதை மக்கள் புரிந்து கொள்வர்" என்று லோக்சபா எதிர்க்கட்சித் தலைவரும், முன்ஞள் மத்திய அமைச்சருமான திரு.வை. பி. சவான் சென்னையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறிஞர்.

"லோக்சபா தேர்தலில்காங்கிரசுக்கு ஏற்பட்ட தோல்வி காங்கிஸின் அடிப்படைக் கொள்கைக்கு ஏற்பட்ட தோல்வியல்ல" என்ருர் சவான்.

"கடந்த காலத்தில் தி. மு. க. தமிழ்நாட்டை பின்தங்கிய நிலைக்குக் கொண்டு சென்று விட்டது" என்றும் அவர் தமது உரையில் சொன்ஞர். (உ)

## ராஜலிங்கம் நியமனத்துக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், வெள்ளி

தமிழினம் எல்லாம் ஓரினம் என்ற கொள்கையை முன்வைத்து தமிழர் விடுதலைக் கூட்டணியினர் சிறந்த கல்விமானும், மனித உரிமைகள் இயக்கப் பிரதிநிதியும் சிறந்த சமூக சேவையாளருமான திரு. கே. ரி. இராஜலிங்கத்தை உடுப்பிட்டி வேட்பாளராகத் தேர்ந்தெடுத்தமைக்காக தமிழர் விடுதலைக்கூட்டணியினரைப் பாராட்டுவதோடு அவரின் வெற்றிக்காக அயராதுழைக்கும் உடுப்பிட்டி முன்ஞள் எம். பி. திரு. ஜெயக்கொடியின் தியாக உணர்ச்சிக்கு நன்றி தெரிவித்தும், நல்லூர்த் தொகுதியில் வேட்பாளராக நிற்கும் தமிழர் விடுதலைக்கூட்டணி செயலதிபர்களில் ஒருவரான சிவாவிற்கு பூரண ஆதரவு அளிப்பதோடு, வீடுவீடாகச் சென்று ஆதரவு திரட்டுவதெனவும் அரியாலை கலைமகள் சமூக சேவாமன்றத்தினர் முடிவு செய்துள்ளார்கள். (அ)

## கட்டுப்பணம் செலுத்தினர்

யாழ்ப்பாணம், வெள்ளி

உடுப்பிட்டித் தொகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிடும் திரு. த. இராசலிங்கத்தின் கட்டுப்பணத்தை தொண்டமனுறு கூட்டணிக் கிளையினர்நேற்றுக் கட்டிஞர்கள்.

### திருநாவுக்கரசு

வட்டுக்கோட்டைத்தொகுதி கூட்டணி வேட்பாளர் திரு. த. திருநாவுக்கரசுவின் கட்டுப்பணத்தை அராலி வடக்கு கூட்டணிக் கிளையினர் கட்டினர்.

### தர்மர்

மானிப்பாய்த் தொகுதிக் கூட்டணி வேட்பாளர் திரு. வி. தர்மலிங்கம், யாழ்ப்பாணம் தொகுதி வேட்பாளர் திரு. வி. யோகேஸ்வரன் ஆகியோரின் கட்டுப்பணமும் நேற்றுக்கட்டப்பட்டது.

### அமிர்

காங்கேசன்துறைத் தொகுதியில் தமிழர்விடுதலைக்கூட்டணி அபேட்சகராகப் போட்டியிடும் திரு. அ. அமிர்தலிங்கத்தின் கட்டுப்பணத்தை கட்டுவன், மயிலிட்டி தெற்கு, வறுத்தலைவிளான் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த தமிழர் விடுதலைக் கூட்டணியினர் சார்பில் திருமதி அ. சுந்தரம்பிள்ளையிஞல் கட்டப்பட்டது.

### சிவா

வண்ணூர்பண்ணை மக்களால் சேர்க்கப்பட்ட கட்டுப்பணத்தை நல்லூர்த் தொகுதி கூட்டணி வேட்பாளர் திரு. எம். சிவசிதம்பரத்திடம் கூட்டணிப் பிரமுகரான சட்டத்தரணி ஆர். விஸ்வநாதன் கையளித்தார்.

இன்று காலை நல்லூர் ஆலய வழிபாட்டைத் தொடர்ந்து இப்பணம் கட்டப்படவிருக்கிறது.

### சி. பொ. ம.

சாவகச்சேரித் தொகுதியில் தமிழர் சுயர்ட்சிக்கழக வேட்பாளராகப் போட்டியிடும் சட்டத்தரணி திரு. சி. பொ. மயில்வாகனின் கட்டுப்பணத்தை சாவகச்சேரித் தொகுதி வாலிபர்கள் நேற்று செலுத்திஞர்.

### குமார்

யாழ்ப்பாணத் தொகுதியில் போட்டுயிடும் தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணித் தலைவர் திரு. குமார் பொன்னம்பலத்தின் கட்டுப்பணம் நேற்று செலுத்தப்பட்டது,

### யோகேந்திரா

ஊர்காவற்றுறைத் தொகுதியில் போட்டியிடும் தமிழ்மக்கள் இயக்க அமைப்பாளர் திரு. யோகேந்திரா துரைச்சாமியின் கட்டுப்பணம்நேற்று கட்டப்பட்டது.

### ஸ்ரீதரன் போட்டி

காங்கேசன்துறைத் தொகுதியில் மல்லாகத்தைச் சேர்ந்த சட்டத்தரணி சிவப்பிரகாசம் ஸ்ரீதரன் போட்டியிடவிருக்கின்ருர்.

இவரின் கட்டுப்பணம் நேற்றுக் கட்டப்பட்டது.

## இன்று

யாழ்ப்பாணம், வெள்ளி

இன்று பருளை சிவசுப்பிரமணியகோவில் சங்காபிஷேகம் இன்று சிறப்பாக நடைபெறுகின்றது.

இரவு விஷேச மேளக்கச்சேரிம் வயலின்கச்சேரியும் இன்னிசைக்கச்சேரி ஆகியவை நடைபெறும்.

தவில்மேதை காலஞ்சென்ற தட்சணமூர்த்தியின் மகன் சிறுவன் ஜூனியர் தட்சணமூர்த்தியின் தவில்கச்சேரி விசேட நிகழ்ச்சியாக இடம் பெறும். (கா-இ)

# துப்பாக்கி முனையில் பெண்களிடம் கொள்ளை

கொழும்பு, வியாழன்

தலங்கமவைச் சேர்ந்த சில பெண்கள் திருமண வீடொன்றிற்குச் சென்றுவிட்டுத் திரும்பிக்கொண்டிருக்கையில் மூன்று பேர் துப்பாக்கிமுனையில் இரு பெண்களது 2000 ரூபா பெறுமதி மிக்க தங்கச்சங்கிலிகளைக் கொள்ளையடித்தனர். இதில் ஒருவர் கைதுசெய்யப்பட்டதுடன் துப்பாக்கியும் மீட்கப்பட்டது.

பிரேமவன்ஸசில்வா என்ற இந்நபர் இருகொலைகள் தொடர்பாகவும் தேடப்பட்டு வந்தவர் என்றும் இவர் பிரபல கேடி அங்கொன சந்திரேயின் நெருங்கிய நண்பர் என்றும் விசாரணையில் தெரியவந்தது.

### ரூ. 51000 கொள்ளை

மகரகமை ஹைதராமணி ஜவுளி உற்பத்தித் தொழிற்சாலைக்கு கார் மூலம் எடுத்துச்செல்லப்பட்ட 51000ரூபா ரொக்கம் கொள்ளையடிக்கப்பட்டது.

துப்பாக்கிமுனையில் இக்கொள்ளை நான்கு இளைஞர்களால் நடத்தப்பட்டது. இவர்களில் டொன்நிகால் என்ற ஒருவரை பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பொதுமக்களின் உதவியுடன் துரத்திப்பிடித்தார்.

இவரிடம் இருந்து 2994 ரூபா 45 சதம் கைப்பற்றப்பட்டது.

கிருலப்பனையைச் சேர்ந்த ஏனைய சந்தேக நபர்கள் மூவரும் பொலிசாரால் தேடப்படுகின்றனர்.

### மற்றுமொரு கொள்ளை

தமதுஅலுவலகத்தில்இருந்து 31,383 ரூபா பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக கறுவாக்காட்டைச் சேர்ந்த தேவாலய மதர் சுப்பிரீயர் பொலிசில் புகார்செய்துள்ளார்.

அலுவலகத்திற்கு வந்து செல்லும் எவரோதான் இக்கொள்ளையை நடத்தியிருக்கலாம் எனப்பொலிசார் கருதுகின்றனர். (உ)

## டாக்டர்கள் பிரச்னை—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சு, சுகாதார அமைச்சு அதிகாரிகளுக்குமிடையில் நடந்த பேச்சுவார்த்தையின் போது இறுதித் தீர்வு காணப்பட்டுவிட்டதாக சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது: அன்று மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தமே டக்டர்களின் சகல பிரச்னைகளுக்கும் இறுதித் தீர்வாக இருந்தது. இதை இருபகுதியினர் ஏற்றுக் கொண்டனர்.

இதே சமயம் டாக்டர்கள் இன்று தொழிற்சங்க நடவடிக்கைகள் மேற்கொள்வது நியாயமாகாது.

கடந்த வருடம் அக்டோபர் 13ல்டாக்டர்கள்பலகோரிக்கைகளை முதலில் சமர்ப்பித்து காலப்போக்கில் அவர்கள் தமது கோரிக்கைகளை அதிகரித்தனர். எனினும் அரசு பின்னர் சமர்ப்பித்திருந்த கோரிக்கைகளுள் நான்கு உட்பட பல கோரிக்கைகளை நிறைவேற்றியுள்ளது. (இ)

## வலங்கைமான் தவில்கச்சேரி

யாழ்ப்பாணம், வெள்ளி

பிரபல தவில் வித்துவான் வலங்கைமான் சண்முகசுந்தரம் இன்று மாலை முன்ஞள் வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஆ. தியாகராசாவின் காரைநகர் இல்லத்தில் நடைபெறும் வைபவத்தில் தவில் வாசிக்கிருர். இவருடன் சின்ன ராஜா சேர்ந்துவாசிப்பார். (இ)

## நாடுமுழுவதும்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லீவில் சென்றனர்.

எனினும் டாக்டர்கள் ஆஸ்பத்திரிக்கு வந்த கடுமையான நோயாளர்களைப் பார்வையிட்டதோடு அவசர சத்திரசிகிச்சைகளையும் மேற்கொண்டனர்.

இதன்கபரணமாக ஆஸ்பத்திரிக்கு நேற்றுக்காலை முதல் மாலைவரை வந்த பெருந்தொகையான நோயாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

நேற்று சத்திரசிகிச்சை நடைபெறும் என திகதி அறிவிக்கப்பட்டிருந்த சாதாரண சத்திரசிகிச்சைகள் எதுவும் நடைபெறவில்லை. இதஞல் சில நோயாளர் தங்கியிருந்த வார்டுகளைவிட்டு வெளியேறினர். (இ)

## செல்வாவின்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பேசுகையில் தெரிவித்தார். ஊர்காவற்றுறைத் தொகுதித் தமிழ் இளைஞர் பேரவையின் ஆதரவில் நொத்தாரிஸ் சி. கந்தையா தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் திரு. கோமேஸ்வரன் மேலும் பேசுகையில் 1948-ம் ஆண்டு முதல்இன்றும் அன்றும் தமிழ் மக்களின் இலட்சியத்துக்காக ஒரே கொள்கையில் நிற்பவர் சுயாட்சிக் கழகத்தலைவர் நவரத்தினம் தான் அவர் கட்டி வளர்த்த கொள்கையில் நிற்பவர்" என்ருர்.

சுயாட்சிக் கழகத் தலைவர் திரு. வ. நவரத்தினம் நாரந்தனைக் கிராமசபை முன்ஞள் தலைவர் திரு. ச. அருமைநாதர் உட்படப் பலர் உரையாற்றினர். (அ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்லேவில் மேலைவிதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஜூன் மாதம் 3-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna. Telegram Eelanaadu Telephone 389 Registered as News paper in Sri Lanka.